DEPOSITION OF WITNESS

Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE COURT, VANUR.

Calender - CMP.No. 972/2025
Miscellaneous -

Sessions -

Deposition of witness for Prosecution PW
Defence

Name : Sumathi

Father Name /
Husband Name : Pazhani

Village :

Taluk :

Caste : -

Calling :

Religion :

Age :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 the day of 10th November 2025

நான் சேமங்கலத்தில் குடியிருந்து வருகிறேன். நான் இந்த வழக்கில் புகார்தாரர் ஆவேன். எனது கணவர் பழனி நரம்பு தளர்ச்சியால் பாதிக்கப்பட்டு இருந்த நிலையில் 17/02/2025 அன்று எனது கணவர் வயிற்றுவலி தாங்காமல் அரளி விதையை அறைத்து குடித்துவிட்டார். அப்போது நான் சென்னையில் இருந்தேன். இந்த விவரத்தை எனது மூத்தார் போன் மூலம் தெரிவித்தார்.

எனது மூத்தார் எனது கணவரை ஆம்புலன்ஸ் மூலம் கோரிமேடு அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்றுள்ளார். நான் அன்றைய தினமே இரவு ஊருக்கு வந்துவிட்டேன். எனது கணவர் சிகிச்சை பலனின்றி 19/02/2025 அன்று காலை இறந்துவிட்டார். போலிசார் 10.00 மணிக்கு வந்தபோது நான் புகார் கொடுத்தேன்.

நான் கொடுத்த புகாரில் போலிசார் புலன் விசாரணை மேற்கொண்டு எனது கணவர் அரளி விதை சாப்பிட்டு இறந்துவிட்டதாக முடிவுக்கு வந்ததால் இந்த வழக்கில் புலன் விசாரணையை நிறுத்தம் செய்வதாக எனக்கு நீதிமன்றம் மூலம் அறிவிப்பு அனுப்பப்பட்டது.

புலன் விசாரணை அதிகாரி தாக்கல் செய்துள்ள இந்த புலன் விசாரணை நிறுத்தம் அறிக்கைக்கு எனக்கு எந்த விதமான ஆட்சபணை இல்லை என்பதை தாழ்மையுடன் தெரிவித்துக்கொள்கிறேன். எனவே புலன் விசாரணை அதிகாரி தாக்கல்செய்துள்ள அறிக்கையை ஏற்றுக்கொண்டு இந்த வழக்கை முடித்துவைக்குமாறு தெரிவிக்கிறேன்.

(சாட்சிக்கு எழுத, படிக்க தெரியாது கையொப்பம் மட்டும் செய்யதெரியும் என்பதால் படித்துகாண்பிக்கப்பட்டு கையொப்பம் பெறப்பட்டது)

(ஓம்)/- XXXX,

நீதித்துறை நடுவர்,
வானூர்.